மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீரைச் செறிவூட்டுவதற்காகத்தான் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட உகந்த இடங்களில் தடுப்பணைகள் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படி பல்வேறு தடுப்பணைகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், பல்வேறு தடுப்பணைகள் கட்டும் பணிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஏரிப் பகுதியில், நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதற்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 286, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

286—

புதிய மின்மாற்றி

***33867—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சருகணி ஊராட்சி, நாகமதி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சருகணி ஊராட்சி, நாகமதி கிராமத்தில் ஆரோக்கிய நகர் எஸ்.எஸ்.3-100

கே.வி.ஏ. மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இந்த மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருந்த மின்பளு 180 கிலோ வாட் ஆகும். மேற்கண்ட மின்மாற்றியில் மின்பளு அதிகமாக இருந்ததைக் கருத்தில் கொண்டு, நாகமதி கிராமத்தில் கூடுதலாக ஒரு புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு, 23-2-2014 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டு இயக்கத்தில் உள்ளது. தற்போது அங்கே சீரான மின் விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சருகணி ஊராட்சி, நாகமதி கிராமத்தில் புதிய மின்மாற்றி வேண்டுமென்று கேட்டிருந்தேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக செய்து தந்து, அது மக்கள் பயன்பாட்டிற்கும் வந்திருக்கிறது.

முற்பகல் 10-10

எனது காரைக்குடி தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை பகுதியிலுள்ள 11 ஊராட்சிகளுக்கு சிவகங்கை தொகுதி, காளையாறு ஒன்றியத்திலிருந்து, புனல் மின்நிலையத்தின்மூலம் மின்சாரம் வந்துகொண்டிருக்கிறது. அதனால், கடைபகுதிகளுக்குச் செல்கின்றபோது, அங்கு மின்சாரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, 12 ஊராட்சிகளுக்குட்பட்ட சருகணியை மையமாக வைத்து, அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஏற்கெனவே கேட்டிருந்தேன். அங்கே இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அங்கே துணை மின் நிலையம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், மாவிடுதிக்கோட்டை ஊராட்சி, மஞ்சனியிலும், செலுகை ஊராட்சி, செவனூரிலும், திருவேகம்பத்து ஊராட்சி, வேலாயுதன்வயலிலும், சிறுவத்தி ஊராட்சி, பப்பனியிலும் மற்றும் உருதிக்கோட்டை ஊராட்சி, உருதிக்கோட்டையிலும் கூடுதலாக

மின்மாற்றி அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காரைக்குடி தொகுதி, சருகணி ஊராட்சி, நாகமதிக்கு இப்போது புதிய மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. அதன் மூலமாக அங்கே இருக்கின்ற 94.94 கிலோ வாட் மின்பளுவைப் பிரித்து, இப்போது தனியாக ஒரு மின்மாற்றி அமைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, அங்கே தாழ்வழுத்த மின்சாரம் மற்றும் மின்சாரப் பற்றாக்குறை பிரச்சினைக்கு இடமில்லை. இப்பொழுது சீரான மின்சாரம் வழங்கப்பட்டுவருகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, சருகணி ஊராட்சிப் பகுதிக்கு காளையார்கோவில் 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து சருகணியிலே தனியாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இப்போது 12-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே, புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு அந்தப் பகுதியினுடைய மின் பளுவை ஆய்வு செய்ததின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் சருகணி இடம் பெறவில்லை என்றாலும்கூட, மின் பளு தற்போது எந்தளவிற்கு அதிகரித்துள்ளது என்பதைக் கண்டறிந்து, மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்து அந்தப் பகுதியிலே புதியதாக 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய பரிசீலனையைச் செய்து, மின் வாரிய நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடம் தயாராக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர் சொன்னதன் அடிப்படையில், புதிய துணை மின் நிலையம் அமைக்க தேவை ஏற்படின், முன்னுரிமை கொடுத்து அமைப்பதற்கு வேண்டிய ஆய்வுகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

2014 ஜூலை 31]

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இடம் இருக்கின்றபட்சத்தில், துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

இடம் மின் துறையினரால் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது; 10 ஏக்கர் இடம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி துணை மின் நிலையம் உருவாக்கித் தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 287, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

287—

மேம்பாலம்

***21660—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, மருதாடு அருகிலுள்ள வழூரில் புதிய மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, வழூர், மருதாடு சாலையில், கி.மீ. 2/6-ல் சுகநதி ஆற்றின் குறுக்கே, உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம்